*International Journal of Linguistics and Computational Applications (IJLCA)* ISSN 2394-6385(Print)
*Volume 1, Issue 1, October – December* ISSN 2394-6393(Online)

# தென் திராவிட மொழி ஆய்வு வரலாறு

ஜோ.சம்பத்குமார்

*முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ் இலக்கியத்துறை, சென்னைப் பல்கலைக்கழகம் மெரினா வளாகம், சென்னை – 600005*

மனிதன் தன் மனதில் எழுந்த எண்ணங்கள் அல்லது கருத்துக்களைப் பிறருக்கு உணர்த்த விரும்பினான். அதற்காகக் கண்டறியப்பட்ட ஒரு கருவியாக மொழிப் பயன்படுகிறது. அதாவது, மனிதன் தோன்றிய பொழுது மொழி தோன்றவில்லை. அப்பொழுது, மெய்பாடுகள் (Grimace) சைகைகள் (Gestures) ஒலிகள் (Sound) ஓவியங்கள் (Pictures) ஆகிய கூறுகளின் அடிப்படையில் மற்றவர்களுக்கு கருத்தை வெளிகொணர்ந்தன. இதை ஊமை மொழிகள் (Dumb Language) என்றும் அழைத்தனர்.

இப்பின்புலத்தில் மொழி உருவாக்க மரபு என்பது இயற்கை - தட்ப வெப்ப சூழல் - உயிரினங்கள் - உறுப்புகள் - வெளிப்பாடு - ஒலி - குறியீடு ஆகிய தன்மைகளின் ஊடாக மொழி ஆக்கம் பெறும். இவற்றில் ஒரு சில கருத்துக்களை மட்டும் வெளிபடுத்த முடிகிறது. இதில் பருப்பொருட்களை (Obiective things) உணர்த்த, தெரிவிக்க முடிகிறது. ஆனால், நுண்பொருட்களை (Abstract things) உணர்த்த, தெரிவிக்க முடியவில்லை. இந்நுண் பொருட்களையும் வெளிபடுத்த மனிதன் ஒரு புதிய பரிமாணங்களை கண்டறிந்தான். அதுவே மொழியாகும்.

அதாவது, சரக்குகளை ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு எடுத்துச் செல்ல ஊர்திகள் பயன்படுவதைப் போன்று, உள்ளத்தில் எழுகின்ற எண்ணங்களை, நினைவுகளை, சிந்தனைகளை, கருத்துக்களைப் பிறருக்கு உணர்த்த சுமந்து செல்லும் ஊர்தியே மொழியாகவும் கட்டமைத்தனர். எனவே மொழி ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு கொண்டுச் செல்லுகின்ற ஓர் ஊர்தி எனலாம். (The Language is the vehicle of thoughts) இச்சூழலில் தென்னிந்திய மொழிகளை ஆய்விற்குட்படுத்திய சிந்தனைகளைப் பற்றி இக்கட்டுரையில் விரிவாகக் காணலாம்.

ஐரோப்பியர்களின் பல்வேறு தாக்கங்களின் மூலம் 18 ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட புரட்சியின் விளைவுகள் ஏராலம். அக்காலக்கட்டத்தில் இலண்டன் மாநகரில் பல விதமான நிறுவனங்களின் ஊடாக, உலகத்தில் காணப்படும் அனைத்து மொழிகள், இனங்கள் போன்றவற்றைப் பற்றிய ஆய்வுகள் நிகழ்ந்தன. குறிப்பாக, மெக்கன்சி என்பவர் தென்னிந்திய ஆய்வை ஆவணங்களுக்கு உட்படுத்தினார். அது மட்டுமல்லாமல் அதற்கான தரவுகளையும் திரட்டினார். மேலும், இவரின் கனவாக மிகப் பெரிய நிறுவனங்களை ஆக்குவதையே நோக்கமாகக் கொண்டிருந்தார். ஆனால், அது நிகழவில்லை ஏனெனில் மிகவும் குறைந்த வயதிலே இறந்து போனார்.

அதனைத்தொடர்ந்து மெக்கன்சியுடன் தொடர்புடையவரும். அவர் பணிகளை நன்றாக அறிந்தவருமான எல்லீஸ் 1812 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட கோட்டை கல்லூரியாகும். இது தமிழியல் ஆய்வுக்கு முக்கியமான முதல் நிறுவனமாகக் கருதலாம். அதாவது, பிரிட்டிஷ் காலத்தில் சென்னையில் அன்று நிலவிய மொழிச் சிக்கலுக்குத் தீர்வு காண்பதற்காகத் தான் இக்கல்லூரி பற்றிய சிந்தனையோட்டம் முதன் முதலில் உருவானது. ஆனால், இதற்கு முன்பாகத் தென்னிந்தியாவில் பேசப்பட்ட மொழிகளின் பெயர்களைக் கூட அறிந்திருக்கவில்லை. ஏனெனில் இவர்களின் நோக்கம் வணிகம், சமயம் பரப்புவதாகவே இருந்தன. இது தவிர சமணர்களும் பௌத்தர்களும் சமயத் தொடர்பாகவே தென்னாட்டில் குடியேறினார்கள். ஆகவே தென்னாட்டு மொழிகளைத் தாமும் அறிந்து கொண்டனர். இது மட்டுமல்லாமல் அம்மொழிகளின் வளர்ச்சிக்கும் உதவினார்கள். இவற்றினுடாக, சமயம் வணிகம் செய்ய வந்தவர்கள் எப்படி மொழியே உள்வாங்கி கொண்டார்கள் என்பது புலனாகிறது.

பொதுவாக, ஐரோப்பிய மரபு என்பது வட்டாரங்களின் ஊடான மொழி ஆய்வாகும். இது பல்வேறு கோணங்களில் நடந்தேறியது. அதாவது, பல்வேறு இடங்களுக்கு பயணம் மேற்கெள்ளும் பொழுது அங்குள்ள மொழிகள் பற்றியான குறிப்புகள் சேகரிக்கப்பட்டு வந்தன. அதில் உள்ள ஒற்றுமை, வேற்றுமைகளைப் பேசவும் விவாதிக்கவும் செய்தன. அதே தன்மையில் வந்த எல்லீஸ் மூலமாக உருவாக்கப்பட்ட ஆய்வு பின்புலம் என்பது நவீன மரபுகளை எல்லாம் உள்வாங்கிய தென்னிந்திய பகுதிகளில் பேசப்பட்ட தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளை ஆய்வு நிகழ்த்தியவர் இவரே. இன்னும் சொல்ல போனால் திராவிட மொழிகளை முதன் முதலில் அடையாளம் கண்டவர். ஆனால், வெளியுலகத்திற்கு அறிந்தவர் கால்டுவெல் ஐயர் 1856 இல் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூலின் வழி அறியலானார். இதற்கு முன்பாக, 1816 இல் இக்கருத்தாக்கத்தை முன்வைத்தவர் எல்லீஸ் ஆவார்.

1784 ஆம் ஆண்டு ‘ஆசியவியல் கழகம்’ என்னும் அமைப்பைக் கல்கத்தாவில் வில்லியம் ஜோன்ஸ் உருவாக்கினார். அது இலண்டன் நகரில் செயல்பட்ட ஆசியாவில் கழகத்தின் கிளையாகவே செயல்பட்டது. அதாவது, ஆசியா, ஆப்பிரிக்க நிலப்பகுதியில் வாழும் மக்கள், மனிதன் சார்ந்த இனவியல் ஆய்வுகளில் அக்கறையுடன் செயல்பட்டது. இந்தியாவில் சமஸ்கிருதம் மொழி தான் முதன்மையானது. அதிலிருந்துதான் இலக்கியம், இலக்கணம், கலை, பண்பாடு, நாகரிகம் எல்லாம் உருப்பெற்றது என்ற கருத்தை முன்வைத்தனர். கி.பி.1812 ஆம் காலக்கட்டம் வரை மேற்குறித்த கருத்துநிலை தான் நடைமுறையில் இருந்தது. ‘சென்னை இலக்கியச் சங்கம்’ உருவாவதற்கு முன்பு வரை இக்கருத்தாடல்கள் தலைத்தூக்கியது.

இதனை வேறொரு கோணத்தில் நிறுவதற்காகத் தான் எல்லீஸ் நிறுவனம் செயல்பட்டது. இந்நிறுவனத்தின் ஊடாக, தமிழ்ப் புலவர்கள், தெலுங்குப் புலவர்கள், கன்னட புலவர்கள், மலையாளப் புலவர்கள் ஆகியோர்களை இணைத்து திராவிட மொழிகள் அல்லது தென்னிந்திய மொழிகளின் பண்பாட்டின் கட்டமைப்பை உருவாக்கினார்கள் என்பதை மேற்கண்ட தரவுகளின் அடிப்படையில் புரிந்து கொள்ளலாம்.

இந்த வரலாற்றை அடிப்படையாக வைத்துக் கொண்டு தென் திராவிட மொழிகளின் தேற்றமும் உறவும் குறித்து கீழ்வருமாறு பகுத்து காணலாம்.

“தென்னிந்தியாவின் முதன்மை மொழியான தமிழுக்குச் சிறந்த நூல்கள் இருந்தன. ஆனால் இப்போது அவை அருகியே கிடைக்கின்றன.” தமிழின் ‘உயர் வழக்கு’ பிற தென்னிந்திய மொழிகளை அறிய உதவும் ‘திறவுகோல்’ என்று மொழி அறிஞர்கள் கூறுவர்.(2007:153)

தென்னிந்திய பகுதிகளில் வழங்கப்பட்டு வரும் ஒன்றுக் கொன்று தொடர்புடைய இருபத்தைந்து மொழிகளைத் திராவிட மொழிகள் என்றழைத்தனர். இந்நிலையில் திராவிட மொழிக் குடும்பத்தின் பல்வேறு தனி மொழிகள் பற்றிய ஆய்வுக் கட்டுரைகள் மொழி நூலறிஞர் பலரால் வெளியிடப்பட்டன. குறிப்பாக, ஸ்டெங்கெனோ என்பவர் 1906 இல் முண்டா மொழிகள் பற்றியும் குவி மொழிகளினை 1913 இல் பிட் ஜெரால்டு என்பவரும் ஆராய்ந்தனர். 1964 இல் ஜீல்ஸ்பிளாக் என்பவர் திராவிட மொழிகளின் இலக்கண அமைப்பு என்னும் நூலைப் பிரெஞ்சு மொழியில் எழுதி வெளியிட்டார்.

திராவிட மொழியைப் பற்றிய இவரது கொள்கைகள் பலவற்றைப் பேராசிரியர் தாமஸ் பர்ரோ போன்றோர் மறுத்துரைத்தனர். தாமஸ் பர்ரோ என்பவர் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் சமஸ்கிருத பேராசிரியராகப் பணியாற்றிய போது திராவிட மொழிகளில் திருந்தாத மொழிகள் குறித்து ஆய்வு நிகழ்த்தியுள்ளார். இக்காலத்தில் தான் திராவிட மொழிகளைத் தென் திராவிட மொழிகள், நடுத் திராவிட மொழிகள், வட திராவிட மொழிகள் எனப் பிரித்து ஆராய்ந்தனர். இவற்றுள் தென் திராவிட மொழிகள் பற்றியான ஆய்வே இக்கட்டுரையில் பேசப்படுகிறன.

அவை,

1. தமிழ்
2. மலையாளம்
3. இருளா
4. கொடகு
5. கோடா
6. தோடா
7. படகா
8. கன்னடம்
9. துளு

ஆகிய ஒன்பது மொழிகளாக, ஜான் சாமுவேல் தன்னுடைய திராவிட மொழிகளின் ஒப்பாய்வு என்னும் நூலின் வழி அறிந்து கொள்ளலாம். இதில் சு.சக்திவேல் தமிழ் மொழி வரலாறு நூலின் வழி தென் திராவிடம் இருளா, படகா தவிர்த்து மற்ற ஏழு மொழிகளை கொண்டது என்று 1961 ஆம் ஆண்டு மக்கள் கணிப்பு(Census) வழி விளக்கியுள்ளார்.

இவற்றுள் தமிழும் மலையாளமும் மிகத் தொன்மையான (பழமை) காலத்தில் பிரிந்ததால் ஒன்றோடொன்று நெருக்கமான உறவுடையனவாக உள்ளன. தமிழ், மலையாளத்திற்கு அடுத்த நிலையில் கோடா, தோடா போன்ற மொழிகள் நெருங்கிய உறவு கொண்டுள்ளதாக எமனோ கருதினார்.(1996:30) ஆனால், L.V. இராமசாமி ஐயர் கொடகு மொழி தான் தென் திராவிட மொழிகளில் தமிழ், மலையாள மொழிகளுக்கடுத்த நிலையில் உறவுடையது என்று நிலைநாட்டுகின்றார். தென் திராவிட மொழிகளுள் துளு மொழி ஏனைய மொழிகளிலிருந்து வேறுபடுவதால் எமனோ, பி.எச். கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் இம்மொழியினை நடுத் திராவிட மொழிக் கூட்டங்களோடு இணைத்து விட வேண்டிய அவசியத்தைக் கருதினார். அதற்கு பி.எஸ். சுப்பிரமணியம் இதைத் தென் திராவிட மூல மொழியிலிருந்து (Proto – South Dravidian) துளு மொழி முதலில் பிரிந்த காரணத்தினால் அது தமிழ், மலையாளம் போன்ற மொழிகளிலிருந்து அதிக அளவு வேறுபடுகின்றது என்றும் விளக்கியுள்ளார். இப்படியான உறவுகளைக் கொண்டு மொழிகளின் தன்மைகளை உணர்ந்துக் கொள்ள முடிகிறது.

தென் திராவிட மொழிகளுள் படகா மொழி கன்னடத்தின் கிளை மொழியாக (Sister Language) உள்ளது. இதனைப் பேசுகின்ற மக்கள் நீலகிரி மாவட்டத்தில் பெரும்பான்மையாக வாழ்கின்றனர். தோடா, கோடா போன்ற மொழிகளும் நீலகிரி மலைப்பகுதிகளில் உள்ள பழங்குடி மக்களால் பேசப்படுகின்றன. கன்னடம், துளு, கொடகு ஆகிய கர்நாடக மாநிலப் பகுதிகளில் (வழக்கில்) உள்ளன. துளு மொழி 1798 ஆம் ஆண்டில் ஆர்.ஈ.ராபர்ட் என்பவரால் தனி மொழி என்று சுட்டிக்காட்டப்பட்டது. 1837 ஆம் ஆண்டில் தோடா மொழி தனி மொழி என்று தெரிய வந்தது.(1996:31)

தென் திராவிட மொழிகள் முதலில் தமிழ் கன்னடக் கிளை என்றும் துளு என்றும் பிரிந்திருக்க வேண்டும். துளு மொழி இவ்வாறு முதலில் தனி மொழியாகப் பிரிந்த பின்னர்த் தமிழ்க் கன்னடக் கிளை தமிழ் - கொடகுக் கிளை என்றும் கன்னடம் என்றும் பிரிந்திருக்க வேண்டும். கன்னட மொழி பிரிந்து சென்ற அடுத்த நிலையில் தமிழ் - கொடகுக் கிளையிலிருந்து கோடா – தோடா மொழிகள் இணைந்த கிளை பிரிந்திருக்க வேண்டும். இவை பிரிந்த பின்னர், தமிழ் – மலையாளம் கிளையிலிருந்து கொடகு மொழி தனியாகப் பிரிந்து சென்றது. இறுதி நிலையில் மலையாளம் தனியாகப் பிரிந்திருக்க வேண்டும் என்றும், தென் திராவிடக் கிளையிலிருந்து முறையே துளு, கன்னடம், கோடா, தோடா, கொடகு, மலையாளம் என்பன படிப்படியாகப் பிரிந்திருக்க வேண்டுமென்றும் பி.எஸ். சுப்பிரமணியம் விளக்கிச் செல்கின்றார்.(1996:31)

இவற்றுள், தெலுங்கு மொழியினை மத்திய திராவிட மொழிகளோடு இணைத்துக் கூறுவது உண்டெனினும் சில அடிப்படைப் போக்குகளில், தெலுங்கு தென் திராவிட மொழிகளோடு நெருக்கமான உறவு கொண்டிருக்கிறதென்ற கருத்தினை மொழியியல் அறிஞர்கள் வலியுறுத்துகின்றனர். இதனை இன்னாசி நூலின் வழி அறிந்து கொள்ளலாம். இவை அனைத்தும் முன்னைத் திராவிடத்தினின்று தோன்றியவை ஆயினும் அத்தகைய மொழிக் கூறுபாடுகளைப் பெரும்பாலும் காட்டவல்லது தமிழே என்பது நன்கு புலனாகும்.

எனவே தான் கால்டுவெல்லும் தமிழை அடிப்படையாக வைத்தே மற்ற மொழிகளை ஒப்பிட்டு ஆராய்ந்தார். இவருடைய ஆய்வு பெரும்பாலும் தென் திராவிட மொழிகளைப் பற்றியதாக இருப்பதால் இவரது நூலைத் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்று கூறுவதை விட தென் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்று அழைப்பதே பொருந்தும் என்று தெ.பொ.மீனாட்சிசுந்தரம் குறிப்பிடுகிறார். இவருக்கு முன்பாக ஆய்வு நிகழ்த்திய எல்லீஸ் கூட ‘தென்னிந்திய மொழிக் குடும்பம்’ என்றே பகுத்து காட்டினார். மேலும் ‘கேம்ப்பெல் அவர்களின் தெலுங்கு இலக்கண நூலுக்கான முன்னுரையில் சுருக்கமான ஒப்பியல் ஆய்வை மேற்கொண்டுள்ளார். மூன்று திராவிட மொழிகளுக்கிடையே உள்ள ஒலிக்கூறுகளை ஒப்பிடுகிறார். இலக்கண அமைப்பை அல்ல’ (கால்டுவெல்1856:4) என்ற கால்டுவெல்லின் குறிப்பை ட்ரவுட்மன் மேற்கோள் காட்டுகிறார்.

தென்னிந்திய மொழிகளில் பெரும்பான்மையாகப் பேசும் மொழியாக, தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு ஆகிய நான்கு மொழிகளை சுட்டலாம். இவற்றுள் காணப்படும் ஒற்றுமைகள், வேற்றுமைகள் சிலவற்றை கீழ்வருமாறு காணலாம்.

### ஒற்றுமைகள்

எ.கா.

| தமிழ் | மலையாளம் | தெலுங்கு | கன்னடம் |
|---|---|---|---|
| கால் | கால் | கால் | கால் |
| உப்பு | உப்பு | உப்பு | உப்பு |
| மைதா | மைதா | மைதா | மைதா |
| இட்லி | இட்லி | இட்லி | இட்லி |

### வேற்றுமைகள்

| தமிழ் | மலையாளம் | தெலுங்கு | கன்னடம் |
|---|---|---|---|
| அரை | அர | அரெ | அர |
| ஆறு | ஆரு | ஆரு | ஆறு |

மேற்கண்ட நிலைப்பாட்டினை அறிவதற்கு ஒப்பாய்வுகள் முக்கியமான களமாகவே திகழ்கிறது. மேலும், தொல்பொருள் மூலங்கள், அயல் நாட்டார் குறிப்பு, சுவடிகள், நாணயங்கள், காசுகள், சடங்கு, நம்பிக்கை சார்ந்த விஷயங்களின் ஊடாகத் தென்னிந்திய மொழிகளின் நெருக்கமான சூழல்களின் வழி கண்டறிய முடிகிறது. இலக்கண, இலக்கியத் தன்மைகளில் ஒலியன், உருபன், தொடரியல் அமைப்பு முறைகளைக் கொண்டும் தென் திராவிட மொழிகளின் நிலைகளை அறிய முடிகிறது.

பொதுவாக, காலனிய ஆதிக்கம் மொழியை எவ்வாறு கையில் எடுத்துக் கொண்டது. என்பதை இருவகையாகப் பகுத்து காணலாம்.

1. வரிவடிவம் இல்லாத மொழிக்கு அதாவது பேச்சு வழக்கில் உள்ள மொழிக்கு வரிவடிவம் கொடுத்தல்.
2. பேச்சுவடிவம், எழுத்துவடிவம், இலக்கியம், இலக்கணம் கொண்டு மொழியை அணுகிய விதம்.

ஆகிய கருத்து நிலைகளில் வந்த காலனியப் புலமையாளர்கள் மொழியை ஆராய்ச்சிக்கு உட்படுத்த கவனம் செலுத்தி வந்தன.

- காலனிய புலமையாளர்களால் கட்டமைக்கப்பட்ட ‘தென்னிந்தியா’ என்ற நிலைப் பகுதியில்செயல்பட்ட மொழி, இனம் குறித்த மதிப்பீடுகள்.
- எல்லீஸ், கால்டுவெல் உருவாக்கிய ‘ஒப்பிலக்கணம்’ என்னும் துறை சார்ந்து, தமிழ்ச் சூழலில் முன்னெடுக்கப்பட்ட மொழி சார்ந்தும், அம்மொழி பேசும் மக்கள் சார்ந்தும் உருவான கருத்து நிலைகளை அறிதல்.

### பார்வைநூல்கள்

[1] தாமஸ் டிரவுட்மன், திராவிடச் சான்று (எல்லீஸிம் திராவிட மொழிகளும்) காலச்சுவடு பதிப்பகம், சென்னை.2007.

[2] ஜான் சாமுவேல், திராவிட மொழிகளின் ஒப்பாய்வு, ஆசியவியல் நிறுவனம், சென்னை.1996.

[3] இளமாறன்.பா, சிவகுமார்.ஜ, கணேஷ்.கோ, அறியப்படாத தமிழ் உலகம், புதிய புத்தகம் பேசுது, சென்னை.2011.

[4] கோவிந்தன்.கா, ரத்னம்.கி, டாக்டர் கால்டுவெல், திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம், திருமகள் நிலையம், சென்னை.1982.

[5] நஜ்மா.மு, கஸ்தூரி.மு, மோகனா.அ, காமாட்சி.மு,(தொகுப்பாளர்கள்), காஞ்சி:ஐரோப்பிய, அமெரிக்கத் தமிழியல் அறிஞர்கள், பரிசல், சென்னை.2012.

### இதழ்கள்

[6] மாற்றுவெளி:கால்டுவெல் சிறப்பதழ் - சிறப்பாசிரியர்.வீ.அரசு, சென்னை.2008.

[7] உங்கள் நூலகம், கால்டுவெல் இருநூற்றாண்டு சிறப்பிதழ், சென்னை.பிப்ர.2014.